**TAMIL NADU POLICE**
INTEGRATED INVESTIGATION FORM-I

# FIRST INFORMATION REPORT
## முதல் தகவல் அறிக்கை
(Under Section 154 Cr.P.C.)
(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

C 8051842

1. District மாவட்டம் : மதுரை  PS: காவல்நிலையம் ஊ.த.க.பிரிவு  Year: ஆண்டு 2021  FIR No.: மு.த.அ. எண் 12/2021  Date: நாள் 01/10/2021

2. (i) Act சட்டம்: Pc Act 1988 as amended
(ii) Act சட்டம்: by the Pc (Amendment)
(iii) Act சட்டம்: Act 2018.
Sections பிரிவுகள்: 7 & 8 of Pc Act 1988
Sections பிரிவுகள்: as amended by the Pc
Sections பிரிவுகள்: (Amendment) Act 2018.
(iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள்  Date from : நாள் முதல் —  Date to : நாள் வரை 30.09.2021
Time Period : நேர அளவு  Time from : நேரம் முதல்  Time to : நேரம் வரை 16.20 hrs to 22.30 hrs
(b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 01.10.2021  Time நேரம் : 14.00 hrs
(c) General Diary Reference . Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் 01.10.2021  Time நேரம் : 14.30 hrs

4. Type of Information : Written/ Oral : தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக எழுத்து மூலமாக.

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு துாரமும், எத்திசையும் 30 கி.மீ தென் மேற்கு
Beat Number : முறைக் காவல் எண் —  (b) Address : முகவரி —
(c) In case outside limit of this Police Station, then the Name of P.S : இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர்  District : மாவட்டம் —

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் S. கோபாலகிருஷ்ணன்  (b) Father's/ Husband's Name : தந்தை / கணவர் பெயர் S. சுந்தரேசன்.
(c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு 15.06.1971  (d) Nationality : நாட்டினம் இந்தியன்  (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்
Date of Issue : வழங்கப்பட்ட நாள் —  Place of Issue : வழங்கப்பட்ட இடம் —
(f) Occupation : தொழில் துணை ஆட்சியர் அலுவலர்.  (g) Address : முகவரி மாவட்ட ஆட்சியர் அலுவலகம், மதுரை.

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்) (1) திரு. மா. அழகர்சாமி 59/21, த/பெ. மாணிக்கம் பிள்ளை, வட்ட வழங்கல் அலுவலர் / துணை ஆட்சியர், வட்டாட்சியர் அலுவலகம், திருமங்கலம், மதுரை. (2) திரு. கார்த்திக், த/பெ. ராஜு, தனியார் பணியாளர், வட்ட வழங்கல் அலுவலகம், திருமங்கலம். (3) திரு. சிவசங்கரன், த/பெ. சென்னையா, கணினி இயக்குநர், (4) திரு. V. பாண்டி, த/பெ. வேலு செட்டியார், செக்மென்ட் டிரைவர், வட்ட வழங்கல் அலுவலர் ஜீப்பு ஓட்டுநர், திருமங்கலம், மதுரை மாவட்டம்.

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்
— தாமதம் இல்லை —

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

—

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு —

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால் —

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

தனித்தாளில் இணைக்கப்பட்டுள்ளது

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed A. கண்ணன் Rank ஆய்வாளர் to take up the Investigation / Refused Investigation / transferred to PS. ஒ.த.க. பிரிவு, மதுரை ...on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் .............................. பதவி ...................... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு .............................................. காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

[signature] 1/10/21 [signature] 01/10/2021

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் /
பெருவிரல் இரேகைப் பதிவு

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்

01/10/2021 at 18.15 hrs

Name: பெயர் க. குமரகுரு
Rank: நிலை காவல் ஆய்வாளர்,
ஒ.த.க. பிரிவு,
மதுரை. (01/10/2021)

<u>பணிந்து சமர்பிக்கப்படுகிறது:</u>

இன்று 01.10.2021-ம் தேதி நான் (க.குமரகுரு), காவல் ஆய்வாளர் மதுரை ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு அலுவலகத்தில் அலுவலில் இருந்த போது மதுரை மாவட்ட துணை ஆய்வுக்குழு அலுவலர் திரு. S. கோபால கிருஷ்ணன், அவர்கள் என்னிடம் கொடுத்த புகார் மனு மற்றும் அதனுடன் இணைக்கப்பட்ட ஆவணங்ளை பார்வையிட்டதில் புகார் மனுவில் உள்ள விபரம் பின்வருமாறு: அனுப்புநர், S. கோபால கிருஷ்ணன், துணை ஆய்வுக்குழு அலுவலர், மாவட்ட ஆய்வுக்குழு அலுவலகம், மதுரை. பெறுநர், காவல் ஆய்வாளர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, மதுரை. ந.க.எண். 40575/2021/I1, நாள் : 01.10.2021 அய்யா, பொருள் : மதுரை மாவட்டம் - திடீர் இணை ஆய்வு - வருவாய் துறை - மதுரை மாவட்டம், திருமங்கலம் தாலுகா, வட்டாட்சியர் அலுவலகம், வட்ட வழங்கல் அலுவலர் அலுவலகத்தில் 30.09.2021-ம் தேதி மேற்-கொண்ட திடீர் இணை ஆய்வு - தனி அறிக்கை அனுப்புதல் - மேல் நடவடிக்கை வேண்டுதல் குறித்து. பார்வை : மாவட்ட துணை ஆய்வுக்குழு அலுவலர் திடீர் ஆய்வு குறிப்புரை, நாள்: 30.09.2021. நேற்று 30.09.2021-ம் தேதியன்று, மதுரை மாவட்டம் திருமங்கலம் - இராஜபாளையம் மெயின் ரோட்டில் கிழக்கு திசையில் உள்ள திருமங்கலம் வட்டாட்சியர் அலுவலக கட்டிடத்தின் இரண்டாம் தளத்தில் உள்ள திருமங்கலம் வட்ட வழங்கல் அலுவலர் அலுவலகத்தில், திருமங்கலம் தாலுகாவில் உள்ள அனைத்து நியாயவிலைக்கடை விற்பனையாளர்களுக்கு மாதாந்திர ஆய்வுக்கூட்டம் நடைபெறுவதாகவும், மேற்படி ஆய்வின் முடிவில் விற்பனையாளர்கள் மாதாந்திர இருப்பினை வட்ட வழங்கல் அலுவலர் திரு.அழகர்சாமி அவர்களிடம் சமர்ப்பிக்கும் போது, திரு.அழகர்சாமி விற்பனையாளர்களிடம் மாதாந்திர இருப்புக்கணக்கை சரிசெய்ய வசூல் செய்வதாகவும் கிடைத்த இரகசிய தகவலின்படி மதியம் சுமார் 15.00 மணி முதல் மேற்படி அலுவலகத்தை தொடர்ந்து கண்காணித்த போது நியாயவிலைக்கடை விற்பனையாளர்கள் மாதாந்திர இருப்பினை சமர்ப்பித்து லஞ்சம் கொடுத்துவிட்டு வெளியில் செல்வது தெரியவந்தது. அதை தொடர்ந்து மாலை சுமார் 16.20 மணி அளவில் மதுரை மாவட்ட ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு காவல் ஆய்வாளர் திரு.K.குமரகுரு மற்றும் போலீஸ் பார்ட்டியினருடன் மேற்படி

அலுவலகத்தின் உள்ளே சென்றபோது மேற்படி அலுவலகத்தின் கிழக்கே மேற்கு பார்த்தவாறு தனது இருக்கையில் அமர்ந்திருந்த நபரின் அலுவலக மேஜையில் வட்ட வழங்கல் அலுவலர் என்ற பெயர் பலகை இருந்தது. அந்த அலுவலரிடம் அறிமுகம் செய்து கொண்டு விசாரித்தபோது அவர் தனது பெயர் திரு.அழகர்சாமி என்றும் தான் மேற்படி அலுவலகத்தில் வட்ட வழங்கல் அலுவலராக பணியாற்றுவதாக தெரிவித்தார். மேலும் 30.09.2021 -ம் தேதி காலை முதல் அவருடைய எல்லைக்குட்பட்ட நியாய விலைக்கடை விற்பனையாளர்களுக்கு மாதாந்திர ஆய்வு கூட்டம் நடைபெற்று வந்ததாக தெரிவித்தார். அதன் பேரில் மேற்படி அலுவலகத்தை பார்வையிட்டபோது அவரது இருக்கைக்கு வடக்கே ஒரு சிறிய கணிணி மேஜை இருந்தது. அவருக்கு எதிர்புறம் அறையின் மேற்கே இரண்டு அலுவலர்கள் தனித்தனி இருக்கையில் அமர்ந்து கணிணியில் வேலை செய்து கொண்டிருந்தனர். அவர்களுக்கு பின்புறம் மேற்கு பக்க சுவரை ஒட்டி ஒரு மர பீரோ இருந்தது. அந்த இரண்டு நபர்களுக்கு தெற்கே சுவர்ரை ஒட்டி இருந்த ஒரு இருக்கையில் மற்றொரு நபர் அமர்ந்து அவருக்கு முன்பாக மேஜையில் இருந்த கோப்புகளை பார்த்து கொண்டிருந்தார். அவருக்கு பின்புறம் மேற்படி அலுவலக அறையின் தென்மேற்கு மூலையில் சுமார் 5 அடி உயர மர பீரோ இருந்தது. அலுவலக வடக்கு பக்கம் சுவருக்கு பதிலாக முழுவதும் கண்ணாடி தடுப்பு இருந்தது. அதன் கீழே விற்பனையாளர்கள் அமரும் வகையில் இரும்பு இருக்கைகள் போடப்பட்டிருந்தது. தொடர்ந்து அழகர்சாமி அவர்களை விசாரணை செய்தபோது, தான் கடந்த 04.02.2021-ம் தேதி முதல் இந்த அலுவலகத்தில், வட்ட வழங்கல் அலுவலராக பணியாற்றுவதாகவும், தனக்கு உதவியாக திரு. சபரிநாதன் மற்றும் திரு. பாண்டி ஆகிய தனிநபர்கள் அலுவலகத்தில் வேலை செய்து வருவதாகவும் தெரிவித்தார். மேலும், வருவாய் துறையிலிருந்து திருமங்கலம் வட்ட வழங்கல் அலுவலகத்திற்கு திரு. ஆனந்த், இளநிலை உதவியாளர் மற்றும் திரு. நாகேந்திரன், இளநிலை உதவியாளர் ஆகியோர் பணிநியமனம் செய்யப்பட்டிருப்பதாகவும், ஆனால் அவர்கள் இருவரும் தொடர்ந்து வட்டாட்சியர் அலுவலகத்திலேயே பணிபுரிவதாகவும் தெரிவித்தார். மேலும், அலுவலக கணிணிகள் மற்றும் Point of Sale (POS) கருவிகளை பராமரிக்க Oasys Cybernatics Pvt. Ltd. Chennai- என்ற நிறுவனத்திலிருந்து கார்த்திக் என்பவர் தனக்கு உதவியாக பணியாற்றுவதாகவும்,

அவருக்குரிய சம்பளத்தை மேற்படி தனியார் நிறுவனமே வழங்கி வருகிறது என்றும் தெரிவித்தார். தொடர்ந்து, திரு. அழகர்சாமி அவர்களை சோதனை செய்தபோது, அவர் அணிந்திருந்த பிரவுன் நிற பேண்ட்டின் வலது பக்க பாக்கெட்டிலிருந்து, கத்தையாக பணத்தை எடுத்து என்னிடம் ஆஜர் செய்தார். அந்த பணத்தை நான் வாங்கி எண்ணிப்பார்த்த போது, அதில் பணம் **ரூ.3,240/-** இருந்தது. மேலும், அவரது இருக்கைக்கு வடக்கே இருந்த சிறிய கணிணி மேஜை மீது இருந்த, அவரது கருப்பு மற்றும் மெருன் கலரில் உள்ள ROSHAN என அச்சடிக்கப்பட்ட லஞ்ச் பேக்கை சோதனையிட, அதில் கத்தையாக பணம் இருந்தது. மேற்படி பணத்தை பற்றி கேட்க, அவரால் எவ்வளவு உள்ளது என்று கூறமுடியவில்லை. பின்னர், அந்த பணத்தை நான் வாங்கி எண்ணிப்பார்த்த போது, அதில் பணம் **ரூ.7,500/-** இருந்தது. மேற்படி அனைத்து பணம் குறித்து திரு. அழகர்சாமி அவர்களிடம் விளக்கம் கேட்ட போது, தனது மருத்துவ செலவுக்காக வைத்திருப்பதாக தெரிவித்தார். ஆனால், அவர் கூறிய காரணம் ஏற்றுக்கொள்ள கூடியதாக இல்லை என்பதாலும், மேற்படி பணம் இன்று நடைபெற்ற மாதாந்திர ஆய்வுக் கூட்டத்தின் போது, விற்பனையாளர்கள் லஞ்சமாக கொடுத்த பணம் என்ற சந்தேகத்தின் பேரில், அவர் வைத்திருந்த மொத்தப்பணம் ரூ.10,740/- என்னால் கைப்பற்றப்பட்டது. மேலும் மேற்படி லஞ்சப்பணம் ரூ.7,500/- வைக்கப்பட்டிருந்த கருப்பு மற்றும் மெருன் கலரில் உள்ள ROSHAN என அச்சடிக்கப்பட்ட லஞ்ச் பேக் கைப்பற்றப்பட்டது. மேலும், திரு. அழகர்சாமி, தனது சட்டையின் மேல்பையில் வைத்திருந்த பணம் ரூ.250/- குறித்து கேட்ட போது, அதனை தனது சொந்த செலவிற்காக வைத்திருப்பதாக கூறியதன் பேரில், மேற்படி பணம் ரூ.250/- அவரிடமே திரும்ப ஒப்படைக்கப்பட்டது. தொடர்ந்து, மேற்படி அலுவலகத்தில் பணியில் இருந்த தனிநபரான திரு.பாண்டி என்பவரை விசாரணை செய்த போது, தான் மேற்படி அலுவலகத்தில் கடந்த நான்கு வருடங்களாக செக்ஷன் ரைட்டராக பணிபுரிவதாக தெரிவித்தவரை, சோதனை செய்த போது, அவர் தனது சட்டையின் உள்ளே அணிந்திருந்த வெள்ளை நிற பனியனின் உள்புறம் இருந்து பணத்தை கத்தையாக எடுத்து ஆஜர் செய்தார். அந்த பணத்தை நான் வாங்கி எண்ணிப்பார்த்த போது, அதில் பணம் **ரூ.8,950/-** இருந்தது. மேற்படி பணம் குறித்து திரு. பாண்டி அவர்களிடம் விளக்கம் கேட்ட போது, 30.09.2021-ம் தேதி நடைபெற்ற மாதாந்திர ஆய்வுக் கூட்டத்தின் போது, விற்பனையாளர்கள் தனக்கு செலவிற்காக

கொடுத்த பணம் என தெரிவித்தார். எனவே, மேற்படி பணம் **ரூ.8,950/-** என்னால் கைப்பற்றப்பட்டது. மேலும், திரு.பாண்டி, தனது சட்டையின் மேல்பையில் வைத்திருந்த பணம் ரூ.60/- குறித்து கேட்ட போது, அதனை தனது சொந்த பணம் என கூறியதன் பேரில், மேற்படி பணம் ரூ.60/- அவரிடமே திரும்ப ஒப்படைக்கப் பட்டது. தொடர்ந்து, திரு. பாண்டி அமர்ந்திருந்த இருக்கையின் பின்பக்கம், தென்மேற்கு மூலையில் கிழக்கு முகமாக இருந்த சுமார் 5 அடி உயர மர பீரோவை சோதனையிட்ட போது, மேற்படி மர பீரோவின் முதல் தட்டில் இருந்த கோப்புகளுக்கு அடியில் கத்தையாக வைத்திருந்த பணத்தை திரு. பாண்டி எடுத்து ஆஜர் செய்தார். அந்த பணத்தை நான் வாங்கி எண்ணிப்பார்த்த போது, அதில் பணம் **ரூ.8,320/-** இருந்தது. மேலும், மேற்படி மர பீரோவின் 2வது தட்டில் இருந்த ஆவணங்களுக்கு கீழே வைக்கப்பட்டிருந்த ஒரு பச்சை நிற அலுவலக கவரை எடுத்து ஆஜர் செய்தார். அந்த கவரின் மேலே FORM 13-B - A - POSTAL BALLOT PAPER என அச்சடிக்கப்பட்டிருந்து. அதனுள்ளே கத்தையாக இருந்த பணத்தை எடுத்து நான் எண்ணிப்பார்த்த போது, அதில் பணம் **ரூ.17,150/-** இருந்தது. மேற்படி இரண்டு பணக்கத்தைகள் குறித்து திரு. பாண்டி அவர்களிடம் விளக்கம் கேட்ட போது, 30.09.2021-ம் தேதி நடைபெற்ற மாதாந்திர ஆய்வுக் கூட்டத்தின் போது, விற்பனையாளர்கள் வழக்கமாக அலுவலக செலவிற்காக கொடுத்ததை வாங்கி பீரோவில் வைத்திருப்பதாகவும், அந்த பணத்தை 30.09.2021-ம் தேதி மாலை, வட்ட வழங்கல் அலுவலர் திரு. அழகர்சாமி அவர்கள் வீட்டிற்கு செல்லும் போது கொடுக்க வைத்திருப்பதாகவும் தெரிவித்து, தான் வைத்திருந்த நியாயவிலை கடை விபரங்கள் எழுதப்பட்ட துண்டு சீட்டை ஆஜர் செய்தார். மேற்படி பணம் மற்றும் துண்டு சீட்டு சம்மந்தமாக வட்ட வழங்கல் அலுவலர் அவர்களிடம் கேட்ட போது, தனக்கு ஒன்றும் தெரியாது என்று தெரிவித்தார். எனவே, மேற்படி பணம் ரூ.8,320/- மற்றும் பணம் ரூ.17,150/- ஆகமொத்தம் ரூ.25,470/-, FORM 13-B - A - POSTAL BALLOT PAPER என அச்சடிக்கப்பட்ட பச்சைநிற அலுவலக கவர் மற்றும் பாண்டி ஆஜர் செய்த ஒரு பக்கம் எழுதப்பட்ட துண்டு சீட்டு ஆகியவை என்னால் கைப்பற்றப்பட்டது. மேலும், மேற்படி மர பீரோவின் அதே 2வது தட்டில் மற்றொரு வெள்ளைநிற அட்டைப்பெட்டியில் கத்தையாக இருந்த பணத்தை திரு. பாண்டி எடுத்து ஆஜர் செய்தார். அந்த பணத்தை நான் வாங்கி எண்ணிப்பார்த்த போது, அதில் பணம் **ரூ.3,680/-** இருந்தது. அந்த பணம் குறித்து

விளக்கம் கேட்ட போது, வட்ட வழங்கல் அலுவலர் திரு. அழகர்சாமி கடந்த 23.09.2021-ம் தேதி முதல் 29.09.2021-ம் தேதி வரை **ரூ.2,500/-** கொடிநாள் நிதியாக வசூல் செய்ததாகவும், மேற்படி குடும்ப அட்டை நகல் வழங்குவதற்கு 59 பேரிடம் தலா ரூ.20/- வீதம் மொத்தம் **ரூ.1,180/-** வசூல் செய்து வைத்திருப்பதாகவும் தெரிவித்தார். அவரது விளக்கம் மற்றும் ஆவணங்கள் சரியாக இருந்ததால் மேற்படி பணம் **ரூ.3,680/-** திரு. அழகர்சாமியிடம் திரும்ப ஒப்படைக்கப்பட்டது. தொடர்ந்து, மேற்படி அலுவலகத்தில் பணியில் இருந்த, Oasys Cybernatics Pvt. Ltd. Chennai என்ற நிறுவனத்திலிருந்து திருமங்கலம் தாலுகா பொறியாளராக பணியாற்றும் திரு.கார்த்திக் என்பவரை சோதனை செய்த போது, அவர் அணிந்திருந்த நீல நிற சிறய பூக்கள் டிசைன் போட்ட வெள்ளை நிற அரைக்கை சட்டையின் மேல் பாக்கெட்டிலிருந்து பணத்தை கத்தையாக எடுத்து ஆஜர் செய்தார். அந்த பணத்தை நான் வாங்கி எண்ணிப்பார்த்த போது, அதில் பணம் **ரூ.1,200/-** இருந்தது. மேலும், அவரது இருக்கைக்கு கீழே இருந்த, தனது சிகப்பு நிற DRAZO என அச்சிடப்பட்ட லஞ்ச் பேக்கின் உள்ளே கத்தையாக இருந்த பணத்தை திரு. கார்த்திக் எடுத்து ஆஜர் செய்தார். அந்த பணத்தை நான் வாங்கி எண்ணிப்பார்த்த போது, அதில் பணம் **ரூ.2,900/-** இருந்தது. மேற்படி தொகை குறித்து திரு. கார்த்திக் அவர்களிடம் விளக்கம் கேட்ட போது, தகுந்த விளக்கத்தை கூறவில்லை. எனவே மேற்படி பணமானது விற்பனையாளர்கள் வழங்கிய லஞ்சப்பணம் என கருதி **ரூ.4,100/-** அவரிடமிருந்து என்னால் கைப்பற்றப்பட்டது. மேலும், திரு. கார்த்திக், லஞ்சப்பணம் ரூ.2,900/- வைத்திருந்த சிகப்பு நிற DRAZO என அச்சிடப்பட்ட லஞ்ச் பேக்கும் கைப்பற்றப்பட்டது. மேலும், திரு. கார்த்திக், தனது பேண்ட் பாக்கெட்டில் வைத்திருந்த பணம் ரூ.140/- குறித்து கேட்ட போது, அதனை தனது சொந்த செலவிற்காக வைத்திருப்பதாக கூறியதன் பேரில், மேற்படி பணம் ரூ.140/- அவரிடமே திரும்ப ஒப்படைக்கப்பட்டது. தொடர்ந்து, மேற்படி அலுவலகத்தில் கணிணி இயக்கும் பணியில் இருந்த மற்றொரு தனிநபரான திரு. சபரிநாதன் என்பவரை சோதனை செய்த போது, அவர் அணிந்திருந்த நீல நிற ஜீன்ஸ் பேண்ட்டின் வலது புற பாக்கெட்டில் இருந்து பணத்தை கத்தையாக எடுத்து ஆஜர் செய்தார். அந்த பணத்தை நான் வாங்கி எண்ணிப்பார்த்த போது, அதில் பணம் **ரூ.2,920/-** இருந்தது. மேற்படி பணம் குறித்து திரு. சபரிநாதன் அவர்களிடம் விளக்கம் கேட்ட போது,

30.09.2021-ம் தேதி விற்பனையாளர்கள் செலவுக்காக கொடுத்த பணத்தை பெற்று தனது பேண்ட் பாக்கெட்டில் வைத்திருந்ததாக தெரிவித்தார். எனவே, மேற்படி திரு.சபரிநாதன் அவர்கள் விற்பனையாளர்களிடமிருந்து 30.09.2021-ம் தேதி வசூல் செய்து வைத்திருந்த பணம் **ரூ.2,920/-** என்னால் கைப்பற்றப்பட்டது. மேற்படி நபர் தனிநபர் என்றும், தனக்கு தினந்தோறும், ரூ.200/- முதல் ரூ.300/- வரை கூலியாக திரு. அழகர்சாமி அவர்கள் கொடுப்பார் என கூறினார். மேலும், திரு. சபரிநாதன், தனது சட்டையின் மேல்பையில் வைத்திருந்த பணம் ரூ.110/- குறித்து கேட்ட போது, அதனை தனது சொந்த செலவிற்காக வைத்திருப்பதாக கூறியதன் பேரில், மேற்படி பணம் ரூ.110/- அவரிடமே திரும்ப ஒப்படைக்கப்பட்டது. மேலும் திடீர் இணை ஆய்வின் போது, மேற்படி அலுவலகத்திலிருந்த (1) திரு. அழகர்சாமி, வட்ட வழங்கல் அலுவலர், (2) திரு. பாண்டி (3) திரு. கார்த்திக், தாலுகா பொறியாளர் மற்றும் (4) திரு.சபரிநாதன் ஆகியோரை விசாரிக்க அவர்கள் தனித்தனியாக எழுத்துப்பூர்வமான வாக்குமூலத்தை கொடுத்தார்கள். மேற்படி திருமங்கலம் வட்ட வழங்கல் அலுவலர் அலுவலகத்தில், திடீர் இணை ஆய்வின் போது மேற்குறிப்பிட்ட அலுவலர்கள் சரியான விளக்கம் தெரிவிக்க இயலாமல் வைத்திருந்த பணம் மொத்தம் **ரூ.52,180/-**, பணம் வைக்கப்பட்டிருந்த கருப்பு மற்றும் மெருன் கலரில உள்ள ROSHAN என அச்சடிக்கப்பட்ட லஞ்ச் பேக், FORM 13-B - A - POSTAL BALLOT PAPER என அச்சடிக்கப்பட்ட பச்சைநிற அலுவலக கவர் மற்றும் சிகப்பு நிற DRAZO என அச்சிடப்பட்ட லஞ்ச் பேக் கைப்பற்றப்பட்டது. மேற்படி அலுவலக வட்ட வழங்கல் அலுவலர் திரு.அழகர்சாமி அவர்கள் விசாரணைக்காக **(1)** நகல் அட்டை வழங்கும் மனுக்கள் பதிவேடு (பக்கம் 1 முதல் 57 வரை எழுதப்பட்டது) **(2)** ரூ.20/- நகல் அட்டை இரசீது அடிக்கட்டை நகல்படி 169051 முதல் 169100 வரை, **(3)** ரூ.20/- நகல் அட்டை இரசீது அடிக்கட்டை நகல்படி 169001 முதல் 169009 வரை எழுதப்பட்டது **(4)** திருமங்கலம் வட்ட வழங்கல் அலுவலர் அவர்களின் ந.க. எண்.4900/ 2019/சி1, நாள் : 22.09.2021 (பக்கம் 1 முதல் 6 வரை), **(5)** திருமங்கலம் வட்ட வழங்கல் அலுவலர் அவர்களின் ந.க. எண்.4900/2019/C1 நாள் : 10.08.2021 (பக்கம் 1 முதல் 8 வரை), **(6)** திருமங்கலம் வட்ட வழங்கல் அலுவலர் அவர்களின் ந.க. எண்.4900/2019/C1 நாள் : 24.08.2021 (பக்கம் 1 முதல் 8 வரை), **(7)** மாவட்ட வழங்கல் அலுவலர் அவர்களின் செயல்முறை ஆணைகள் ந.க.

எண்.8653/2021/கு.பொ.6, நாள்: 26.05.2021 (பக்கம் 1 முதல் 8 வரை), **(8)** Government of Tamil Nadu E- Challan - Challan Number 2021093 0572103 - Dated 30.09.2021 (பக்கம் 1 முதல் 6 வரை), **(9)** திருமங்கலம் வட்ட வழங்கல் அலுவலர் அவர்களால் இன்று 30.09.2021-ம் தேதி ஆய்வு செய்யப்பட்ட 58 நியாய விலைக் கடைகளின் அத்தியாவசிய பொருட்கள் விநியோகம் விபரபட்டியல்கள் (பக்கம் 1 முதல் 118 வரை) **(10)** திரு. V. பாண்டி அவர்கள் ஆஜர் செய்த ஒரு பக்கம் எழுதப்பட்ட நியாய விலைக்கடைகளின் கிராம பெயர் எழுதப்பட்ட துண்டு சீட்டு மற்றும் **(11)** படை வீரர் கொடிநாள் நிதி இரசீது எண். 2020-21 வரிசை எண்.2108101 முதல் 2108200 வரை உள்ளது ஆகிய ஆவணங்களை ஆஜர் செய்தார். அந்த ஆவணங்கள் கைப்பற்றப்பட்டது. இது சம்மந்தமான திடீர் இணை ஆய்வு குறிப்புரை **இரவு 22.30** மணிக்கு முடிக்கப்பட்டது. திடீர் இணை ஆய்வு குறிப்புரையின் நகலை திரு. அழகர்சாமி, வட்ட வழங்கல் அலுவலர் அவர்களுக்கு வழங்கி ஒப்புகை பெறப்பட்டது.

மதுரை மாவட்டம், திருமங்கலம் தாலுகா, வட்டாட்சியர் அலுவலகம், வட்ட வழங்கல் அலுவலர் அலுவலகத்தில் வட்ட வழங்கல் அலுவலராக பணிபுரியும் திரு. M.அழகர்சாமி அவர்கள் மாதாந்திர ஆய்வுக் கூட்டத்தின் போது, விற்பனையாளர்களிடமிருந்து லஞ்சமாக பெற்ற மொத்தப்பணம் ரூ.10,740/-ம், பணம் வைக்கப்பட்டிருந்த கருப்பு மற்றும் மெருன் கலரில் உள்ள ROSHAN என அச்சடிக்கப்பட்ட லஞ்ச் பேக், திரு.பாண்டி அவர்களிடம் கைப்பற்றப்பட்ட பணம் ரூ.8,950/-, மர பீரோவிலிருந்து கைப்பற்றப்பட்ட மொத்தப்பணம் ரூ.25,470/-, திருமங்கலம் தாலுகா பொறியாளராக பணிபுரியும் திரு.கார்த்திக் அவர்களிடமிருந்து கைப்பற்றப்பட்ட மொத்தப் பணம் ரூ.4,100/- ம், பணம் வைக்கப்பட்டிருந்த சிகப்பு நிற DRAZO என அச்சிடப்பட்ட லஞ்ச் பேக், கணிணி ஆப்பரேட்டர் திரு.சபரிநாதன் அவர்களிடமிருந்து கைப்பற்றப்பட்ட பணம் **ரூ.2,920/-** ஆக மொத்தம் ரூ.52,180/-ம், மேலே சொல்லப்பட்ட 11 ஆவணங்கள், சம்பவ இடத்தில் தயாரிக்கப்பட்ட திடீர் இணை ஆய்வு குறிப்புரை மற்றும் சம்மந்தப்பட்ட நான்கு அலுவலர்கள் அளித்த வாக்குமூலங்கள் ஆகியவற்றை இத்துடன் இணைத்துள்ளேன். திரு. மா. அழகர்சாமி, வட்ட வழங்கல் அலுவலர் /துணை வட்டாட்சியர், வட்டாட்சியர் அலுவலகம், திருமங்கலம், மதுரை மாவட்டம், திரு.V.பாண்டி, செக்ஷன் ரைட்டர் (தனிநபர்), வட்ட

வழங்கல் அலுவலர் அலுவலகம், திருமங்கலம், 279/1/2, செல்வகாளியம்மன் கோவில் தெரு, முத்து நகர், திருமங்கலம், மதுரை, திரு. கார்த்திக், தாலுகா பொறியாளர், வட்ட வழங்கல் அலுவலகம், வட்டாட்சியர் அலுவலகம், திருமங்கலம் வட்டம், மதுரை மாவட்டம், Oasys Cybernatics Pvt. Ltd. Chennai மற்றும் திரு. சபரிநாதன், கணிணி இயக்குநர் (தனிநபர்), வட்ட வழங்கல் அலுவலர் அலுவலகம், திருமங்கலம், ஆகியோர்கள் மீது உரிய மேல் நடவடிக்கை எடுக்க ஆவன செய்யுமாறு தங்களிடம் ஒப்படைக்கிறேன். ஒப்பம் (S.கோபால கிருஷ்ணன்), துணைஆய்வுக்குழு அலுவலர், மாவட்ட ஆய்வுக்குழு அலுவலகம், மதுரை. இணைப்பு : 1) திடீர் இணை ஆய்வு குறிப்புரை, நாள். 30.09.2021. 2) கைப்பற்றப்பட்ட ரொக்கப்பணம் ரூ.52,180/-. 3)திரு.அழகர்சாமியின் கருப்பு மற்றும் மெருன் கலரில் உள்ள ROSHAN என அச்சடிக்கப்பட்ட லஞ்ச் பேக். 4) திரு.கார்த்திக் அவர்களின் சிகப்பு நிற DRAZO என அச்சடிக்கப்பட்ட லஞ்ச் பேக். 5) வட்ட வழங்கல் அலுவலகத்தில் கைப்பற்றப்பட்ட 11 ஆவணங்கள். 6) FORM 13-B - A - POSTAL BALLOT PAPER என அச்சடிக்கப்பட்ட பச்சைநிற அலுவலக கவர். 7) நான்கு அலுவலர்களின் வாக்குமூலங்கள். Sir, Received this report today (01.10.2021) at 16.00 hrs along with joint surprise check proceedings dated. 30.09.2021, cash Rs. 52,180/-, Black and Maroon colour ROSHAN named lunch bag of Tr. Alagarsamy, Red colour DRAZO named lunch bag of Tr. karthik, 11 documents seized from the Office of Taluk Supply Office, Thirumangalam, FORM 13-B - A - POSTAL BALLOT PAPER printed in green colour office cover and four statements. After obtaining permission from the superior officers, I (K. Kumaraguru, Inspector of Police, V&AC., Madurai) registered a case in Madurai V&AC., Crime No. 12/2021 u/s 7 and 8 of Prevention of Corruption Act 1988 as amended by the Prevention of Corruption (Amendment) Act 2018 on 01.10.2021 at 16.30 hrs. (Sd.xxxx) K. Kumaraguru, 01.10.2021, Inspector of Police, V&AC., Madurai.

The Original FIR along with the report of District Deputy Inspection Cell Officer, dated. 01.10.2021, Joint Surprise check proceedings dated. 30.09.2021 and connected documents are submitted to the Hon'ble Special Judge, Special Court for Trial of Cases under Prevention of Corruption Act, Madurai and other copies were sent to the officers concerned.

01/10/2021

(K. KUMARAGURU)

INSPECTOR OF POLICE
Vigilance Anti Corruption
MADURAI